Dt.:    Crl. Misc. Petition

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

## CRLMP .No. 641 / 2022

DEPOSITION OF WITNESS :2.

| | | | |
|---|---|---|---|
| Name | : மலைச்சாமி | Father's Name/ Husband Name | : சடையன் |
| Village | உத்தமபாளையம் | Taluk | : |
| Religion | : | Age | : |
| Calling | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 27.06.2023

மனுதாரர் தரப்பு சாட்சி 2

கடந்த 04.07.2021 அன்று காலை 11.00-12.00 மணியளவில் நான் கொம்புக்காரன்புலியூரிலிருந்து தனது பாட்டிவீட்டிற்கு பொன்னம்படுகைக்கு சென்றுகொண்டிதபோது பொன்னம்படுகை சுடுகாட்டு பாலம் அருகே அதிகமாக சத்தம் கேட்டது பக்கத்தில் பார்த்தபோது ஒரு சிகப்பு பைக் கீழே கிடந்தது . நான் வண்டியிலிருந்து கீழே இறங்கி பார்த்தபோது ஒரு நபரை 7 பேர் அடித்துக்கொண்டிருந்தார்கள். நான் பக்கத்தில் போய் விலக்கிவிட்டேன் . அந்த 7 பேரில் 3 பேர் பெயர் தெரியும். மற்ற 4 பேர்களை எனக்கு அடையாளம் தெரியும். அதில் செல்லப்பாண்டி என்பவர் கையில் கத்தி வைத்திருந்தார் .ஈஸ்வரன் என்பவர் கையில்அருவாள் வைத்திருந்தார் . சூரியா என்பவர் கையில் மண்வெட்டி கணை வைத்திருந்தார் . மற்றொரு நபர் பெயர் தெரியாது அடையாளம் தெரியும் தென்னம்மட்டை வைத்திருந்தார். நான் சத்தம்போட்டதும் விலகி ஓடிவிட்டனர் . நான் பார்த்தபோது சின்னச்சாமி என்பவருக்கு வலதுகையின் மொலிக்கு கீழே வெட்டுக்காயம் இருந்து இரத்தம் வழிந்துகொண்டிருந்தது. வலதுபக்க தலையிலும் காயம் இருந்தது . நான்

சின்னச்சாமியை எனது பைக்கில் ஏற்றி பொன்னம்படுகைக்கு அழைத்துச்சென்றேன். அங்கிருந்து மயிலாடும்பாறை மருத்துவமனைக்கு கொண்டுசென்றேன். அங்கு மருத்துவர் இல்லாததால் கடமலைக்குண்டு மருத்துவமனைக்கு சென்றோம் அங்கும் மருத்துவர் இல்லாததால் க .விலக்கு அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றேன் . 4.30 – 5.00 மணியளவில் க.விலக்கு அரசு மருத்துவமனையில் பெட்டில் சேர்த்தேன் . பின் சின்னச்சாமி வீட்டிலிருந்து அவர் மகள் இரவு 08.00 மணியளவில் வந்தார்கள் . பின் நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன்.

T PITCHAIRAJAN

Digitally signed by T PITCHAIRAJAN
Date: 2023.06.30 16:45:52 +0530